# இயல் 7.1 எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.4.3.A

எண்ணியல் - தசம எண்கள் - ஏறு வரிசையில் எழுதுதல் - தநாஅபு பயிற்சி 1.3 - 1-2

Number System - Decimal Numbers - Writing in Ascending order

## எண்ணியல் - தசம எண்கள் - ஏறு வரிசையில் எழுதுதல் - தநாஅபு பயிற்சி 1.3 - 1-2

1. கீழ்க்காணும் எண்களை ஒப்பிட்டுச் சிறிய எண்ணைக் கண்டுபிடி.

i) 2.08, 2.086

2 . 0 8 $<$ 2 . 0 8 6

- முதலில் கொடுக்கப்பட்டுள்ள இரு எண்களின் முழு எண் பகுதியை ஒப்பிட வேண்டும்.
- இங்கு, கொடுக்கப்பட்டுள்ள இரு எண்களின் முழு எண் பகுதியும் சமமானவையே.
- எனவே, அடுத்துள்ள இலக்கமான பத்தில் ஒன்றாம் இலக்கத்தில் உள்ள எண்களை ஒப்பிட வேண்டும்.
- இங்கு அவையும் சமமானவையே.
- எனவே, அடுத்துள்ள இலக்கமான நூறில் ஒன்றாம் இலக்கத்தில் உள்ள எண்களை ஒப்பிட வேண்டும்.
- இங்கு அவையும் சமமானவையே.
- எனவே, அதற்கடுத்துள்ள இலக்கமான ஆயிரத்தில் ஒன்றாம் இலக்கத்தில் உள்ள எண்களை ஒப்பிட வேண்டும்.
- இங்கு, 2.08 - ல் ஆயிரத்தில் ஒன்றாம் இலக்கம் இல்லை. எனவே, அந்த இலக்கத்தின் மதிப்பை 0 எனக் கொள்ள வேண்டும்.
- இங்கு, $0 < 6$. எனவே, 2.08 என்பது சிறிய எண்ணாகும்.

ii) 0.99, 1.9

0 . 9 9 $<$ 1 . 9

- முதலில் கொடுக்கப்பட்டுள்ள இரு எண்களின் முழு எண் பகுதியை ஒப்பிட வேண்டும்.
- இங்கு $0 < 1$. எனவே, 0.99 என்பது சிறிய எண்ணாகும்.

iii) 3.53, 3.35

3 . 5 3 $>$ 3 . 3 5

- முதலில் கொடுக்கப்பட்டுள்ள இரு எண்களின் முழு எண் பகுதியை ஒப்பிட வேண்டும்.
- இங்கு, கொடுக்கப்பட்டுள்ள இரு எண்களின் முழு எண் பகுதியும் சமமானவையே.
- எனவே, அடுத்துள்ள இலக்கமான பத்தில் ஒன்றாம் இலக்கத்தில் உள்ள எண்களை ஒப்பிட வேண்டும்.
- இங்கு $3 < 5$. எனவே, 3.35 என்பது சிறிய எண்ணாகும்.

iv) 5.05, 5.50

5 . 0 5 $<$ 5 . 5 0

- முதலில் கொடுக்கப்பட்டுள்ள இரு எண்களின் முழு எண் பகுதியை ஒப்பிட வேண்டும்.
- இங்கு, கொடுக்கப்பட்டுள்ள இரு எண்களின் முழு எண் பகுதியும் சமமானவையே.
- எனவே, அடுத்துள்ள இலக்கமான பத்தில் ஒன்றாம் இலக்கத்தில் உள்ள எண்களை ஒப்பிட வேண்டும்.
- இங்கு $0 < 5$. எனவே, 5.05 என்பது சிறிய எண்ணாகும்.

v) 123.5, 12.35

1 2 3 . 5 $>$ 1 2 . 3 5

- முதலில் கொடுக்கப்பட்டுள்ள இரு எண்களின் முழு எண் பகுதியை ஒப்பிட வேண்டும்.
- இங்கு $12 < 123$. எனவே, 12.35 என்பது சிறிய எண்ணாகும்.

2. பின்வருவனவற்றை ஏறுவரிசையில் எழுதுக.

i) 2.35, 2.53, 5.32, 3.52, 3.25

| | | |
|---|---|---|
| 2 . 3 5 | ① | ① |
| 2 . 5 3 | ① | ② |
| 5 . 3 2 | ⑤ | ⑤ |
| 3 . 5 2 | ③ | ④ |
| 3 . 2 5 | ③ | ③ |

- முதலில் கொடுக்கப்பட்டுள்ள எண்களின் முழு எண் பகுதியை ஒப்பிட வேண்டும்.
- இங்கு, $2 < 3 < 5$.
- பின்னர், அடுத்த இலக்கமான பத்தில் ஒன்றாம் இலக்கத்தில் உள்ள எண்களை ஒப்பிட வேண்டும்.
- இங்கு, $2 < 3 < 5$.

ஏறுவரிசை:

2.35, 2.53, 3.25, 3.52, 5.32

ii) 123.45, 123.54, 125.43, 125.34, 125.3

| | | |
|---|---|---|
| 1 2 3 . 4 5 | ① | ① |
| 1 2 3 . 5 4 | ① | ② |
| 1 2 5 . 4 3 | ③ | ⑤ |
| 1 2 5 . 3 4 | ③ | ④ |
| 1 2 5 . 3 | ③ | ③ |

- முதலில் கொடுக்கப்பட்டுள்ள எண்களின் முழு எண் பகுதியை ஒப்பிட வேண்டும்.
- இங்கு, $123 < 125$ .
- பின்னர், அடுத்த இலக்கமான பத்தில் ஒன்றாம் இலக்கத்தில் உள்ள எண்களை ஒப்பிட வேண்டும்.
- இங்கு, $3 < 4 < 5$.
- மேலும், 125.34 மற்றும் 125.3 ஆகியவை சமமான பத்தில் ஒன்றாம் இலக்கத்தைப் பெற்றுள்ளன.
- எனவே, அதற்கடுத்துள்ள இலக்கமான நூறில் ஒன்றாம் இலக்கத்தை ஒப்பிட வேண்டும்.
- இங்கு 125.3 - ல் நூறில் ஒன்றாம் இலக்கத்தின் மதிப்பு 0 ஆகும்.
- எனவே, $0 < 3$.

ஏறுவரிசை:

123.45, 123.54, 123.3, 125.34, 125.43


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 31st August, 2022 :: 10:41 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.